# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதிவிசேஷமானது**

අංක 2361/50 - 2023 දෙසැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2023.12.08

***2361/50 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### *சிலாபம் நகர சபை*

*வடமேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் 2238/35ஆம் இலக்க மற்றும் 2021, யூலை மாதம் 30ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் கட்டளை தொடர்களில் 4 (i) கட்டளைக்கு மேலதிகமாக 2023 பெப்புருவரி மாதம் 03ஆம் திகதிய 2317/87 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி கட்டளைகளுக்கிணங்க நகர சபை கட்டளைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவு மூலம் நகர சபைகளுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2023.07.21 ஆந் திகதிய மற்றும் 2341/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் அடங்கிய அட்டவணையில் சிலாபம் நகரசபைக்கு சொந்தமாக வேண்டுமென கருதப்பட்ட பாதைகள் மற்றும் ஒடுக்கமான வழிகள் மத்தியில், குறித்த அறிவித்தல் மூலம் குறித்துரைத்த திகதிக்கு முன்னர் தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிராத பாதைகள் மற்றும் ஒடுக்கமான வழிகள் அத்துடன் குறித்த திகதிக்கு முன்னர் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு பிரகாரம் சிலாபம் நகர சபைக்கு சொந்தமாக வேண்டுமென கருதப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்ட பாதைகள் மற்றும் ஒடுக்கமான வழிகள் அனைத்தும், சிலாபம் நகரசபைக்கு சொந்தமாக வேண்டுமென தீர்மானப் புத்தகத்தில் இலக்கம் 1382 மற்றும் 2023.11.13 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டுள்ளது என பொதுமக்களின் தகவல் பொருட்டு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

குறித்த பாதைகள் மற்றும் ஒடுக்கமான வழிகள் தொடர்பிலான பெயர்ப் பட்டியலொன்று இங்குள்ள அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன்,அதில் அடங்கியுள்ள ஒவ்வொரு பாதையும் ஒடுக்கமான வழியும், சிலாபம் நகர சபைக்கு சொந்தமாக்கிக்கொண்ட பாதைகள் மற்றும் ஒடுக்கமான வழிகள், ஆக கருதுதப்படுதல் வேண்டும் எனவும் மேலும் அறிவிக்கப்படுகின்றது.

**எம். ஏ. எஸ். எஸ். மாரசிங்க,**
செயலாளர் மற்றும் தத்துவங்கள்,
கடமைகளை, பணிகளை நிறைவேற்றும் அலுவலர்,
சிலாபம் நகர சபை.

சிலாபம் நகர சபை அலுவலகம்,
2023, நவம்பர் 27.

**தீர்மானம்**

வடமேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் 2238/35 ஆம் இலக்க மற்றும் 2021, யூலை மாதம் 30 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் கட்டளை தொடர்களில் 4 (i) கட்டளைக்கு மேலதிகமாக 2023, பெப்ருவரி மாதம் 03 ஆம் திகதிய 2317/87 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி கட்டளைகளுக்கு இணங்க, நகர சபை கட்டளைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவு மூலம் நகரசபைகளுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2023.07.21 ஆம் திகதிய மற்றும் 2341/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலின் அட்டவணையில் அடங்கிய பெயர்ப்பட்டியலிலுள்ள பாதைகள் மற்றும் ஒடுக்கமான வழிகள் மத்தியில், தகுதி வாய்ந்த நீதிமன்றத்தில் வழக்குதாக்கல் செய்யப்பட்டிராத அத்துடன் இங்கு பின்வரும் அட்டவணையில் அடங்கிய பாதைகள் மற்றும் ஒடுக்கமான வழிகள் என்பன, நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவு பிரகாரம் சிலாபம் நகரசபைக்குச் சொந்தமான பாதைகள் மற்றும் ஒடுக்கமான வழிகளாகக் கருதுதப்படுதல் வேண்டும் என சிலாபம் நகரசபையின் செயலாளர் எம்.ஏ.எஸ்.எஸ்.மாரசிங்க ஆகிய நான், 2023.11.13 ஆம் திகதிய தீர்மானப் புத்தகத்தில் தீர்மான இலக்கம் 1382 இன் படி தீர்மானம் செய்கின்றேன்.

**அட்டவணை**

| தொ. இல. | பாதையின் இலக்கம் | பாதையின் பெயர் | அதி-கார சபை | தன்மை | தொடக்க ஒருங்கினைப்பு இடது | தொடக்க ஒருங் கிணைப்பு வலது | இறுதி ஒருங் கிணைப்பு இடது | இறுதி ஒருங் கிணைப்பு வலது | பாதை யின் மொத்த தூரம் | பாதை யின் மொத்த அகலம் வேலிக்கு வேலி | பாதை யின் அபிவிருத் தியின் அகலம் (M) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NWP CUC A3/24/3 | சங்கத்தட்டான் வீதி 3 ஆம் ஒழுங்கை | UC | GRV | 264763.151/ 92453.173 | 264763.161/ 92453.163 | 264710.510/ 92450.448 | 264710.510/ 92450.448 | 52.00 | 3.00 | 3.00 |

EOG 12-0115